4.திணைக்களம், கூட்டுத்தாபனம், கம்பனி

12. கூட்டுறவு சங்கம் ஒன்றின் பிரதான பண்புகள் அல்லாதது?
1.ஜனநாயக நிருவாகமுறை
2.இலாப நோக்கம்
3.அங்கத்தவர் நலனுக்காக செயற்படுதல்
4.இலாபம் பலரிடையே பங்கிடல்

13. பண்டமாற்றத்தின் குறைபாடு அல்லாதது?
1.இரட்டை பொருந்துகையின்மை
2.களஞ்சியப்படுத்தல் இலகு
3.அளத்தலில் சிரமம்
4.சிறிய அலகுகளாக பிரிக்கமுடியாமை

14. உற்பத்திக் காரணிகளிலில் மூலதனத்திற்குள் அடங்குபவை?
1.பணம், மண், கனிய வளம்
2.கணக்காளர், பணம், இயந்திரம்
3.இயந்திரம், மோட்டாரர் வாகனம், கட்டடம்
4.காலநிலை, இயந்திரம், பணம்

15. புறச் சூழல் காரணிகளுள் அடங்காதவை?
1.வாடிக்கையாளர்கள்
2.ஊழியர்கள்
3.வழங்குனர்கள்
4.போட்டியாளர்கள்

16. பின்வருவனவற்றுள் வாய்ப்புக்கள் எது?
1.முகாமையாளர்களின் அனுபவங்கள்
2.போதியளவு மூலதனம் இருத்தல்
3.புதிய உற்பத்திமுறைகள்
4.வணிகத்திற்கு வரிச்சலுகைகள் வழங்குதல்

17. போட்டியாளர் உருவாகுதல் நிறுவனத்திற்கு?
1.வாய்ப்பாகும்
2.பலவீனமாகும்
3.அச்சுறுத்தலாகும்
4.பலமாகும்

18. ரவி, ரகு என்பவர்கள் இணைந்து ‘‘லக்கி ஸ்டோர்’’ என்ற பெயரில் வணிகம் ஆரம்பித்தனர்,
1.இவர்கள் வணிகத்தை பதியத் தேவையில்லை
2.இவர்கள் வணிகத்தை பதியவேண்டும்
3.2007ம் ஆண்டும் 7ம் இலக்க கம்பனிச்சட்டப்படி பதியவேண்டும்
4.கூட்டுறவு சட்டத்தின்படி பதியவேண்டும்

19. கூட்டுணைக்கப்பட்ட கம்பனியின் பண்பு இல்லாதது?
1.சட்டஆளுமை இல்லை
2.நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது
3.தொடர்ந்து இயங்கும்
4.அதிக மூலதனம் திரட்டலாம்

20. கூட்டுறவு சங்கத்தின் ஆகக்குறைந்த அங்கத்தவர் தொகை?
1. 5 2. 2 3. 10 4. 8

21. பங்குடமை ஒன்றில் ஆகக்குறைந்தது …….. பங்காளர்களும் ஆகக்கூடியது …… பங்காளர்களும் காணப்படுவர்.

22. உற்பத்தியை பிரதானமாக ……. , ..…….. சேவைகள் என இரு வகைப்படுத்தலாம்.

23 .வணிகத்தின் புறச்சூழல் காரணிகளை ஆராய்வதன் மூலம் ..... , ……. களை அறிந்து கொள்ளலாம்.

24. மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக மாற்றுவது ……. எனப்படும்.

25. வணிகத்திலிருந்து பொருட்களையும்,சேவைகளையும் கொள்வனவு செய்யும் நபர்கள் …… எனப்படும்.

பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. 1. வணிகம் என்றால் என்ன? அதன் பிரிவுகளுக்கான பாய்ச்சல் கோட்டுப்படம் தருக?
2. வணிகத்தின் நோக்கங்கள் 02 தருக?
3. தேவைகள், விருப்பங்களை வேறுபடுத்துக?
4. உற்பத்திகளின் தன்மைக்கு அமைய வணிகங்களை வேறுபடுத்துக?
5. உற்பத்திக் காரணிகள் என்றால் என்ன? அவை எவை?

02. 1.வணிகத்தில் அக்கறை செலுத்தும் 05 பிரிவினரை குறிப்பிட்டு அவர்களின் நோக்கத்தையும் குறிப்பிடுக?
2.வணிகச்சூழல் என்றால் என்ன? அதன் வகைகளை பாய்ச்சல் கோட்டுப்படத்தில் உதாரணத்துடன் காட்டுக?
3.பூகோளமயமாதல் என்றால் என்ன?
4.பூகோளமயமாதலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் 2உம் பாதமான விளைவுகள் 2உம் தருக?
5.வணிகமொன்றின் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் ஒவ்வொன்றுக்கும் 03 உதாரணம் தருக?

03. 1. நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வணிக அமைப்பினை பாய்ச்சல் கோட்டுப்படத்தில் காட்டுக?
2. வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தும் போது எவ்வாறான நியதிகள் பின்பற்றப்படுகின்றது?
3. தனியுரிமை வணிகம் அதிகமாக காணப்படுவதற்கான காரணங்கள் எவை?
4. தனியுரிமை நிறுவனத்தின் அனுகூலம் 2உம் பிரதிகூலம் 2உம் தருக?
5. தனியுரிமையை பதிவு செய்யும் சந்தர்ப்பத்தையும், பதிவு செய்யும் சட்டத்தையும் குறிப்பிடுக?

04. 1. பங்குடமை வியாபாரம் என்றால் என்ன?
2. பங்குடமை வணிகத்தின் அனுகூலங்கள் 3உம் பிரதிகூலம் 3உம் தருக?
3. மோசடி கட்டளை தவிர்ப்பு கட்டளைச் சட்டம் எதனை கூறுகின்றது?
4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் என்றால் என்ன?
5. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் அனுகூலங்கள் 04 தருக?

05. 1. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பிரதிகூலங்கள் 02 தருக?
2. கூட்டுறவுச் சங்கம் என்றால் என்ன?
3. கூட்டுறவுச் சங்கத்தின் அனுகூலங்கள் 2உம் பிரதிகூலங்கள் 2உம் தருக?
4. அரச கூட்டுத்தாபனங்களின் பண்புகள் 3ஐக் குறிப்பிட்டு, அதன் வேறு பெயர்கள் தருக?
5. அரச திணைக்களங்களின் அனுகூலங்கள் 2உம் பிரதிகூலங்கள் 2உம் தருக?

மட்/மம/மில்லத் மகளிர் மகாவித்தியாலயம், காத்தான்குடி

கொரோனா விடுமுறை கால செயலட்டை - 2020

தரம் - 10	தகவல்தொடர்பாடல் தொழிநுட்பம்	நேரம் : 3 மணித்தியாலங்கள்
சுட்டெண் /பெயர் :-		புள்ளி :-

பகுதி – 1

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01.“மாலா இரண்டு வெள்ளை நிற பூக்களை கொண்டு வந்தாள்” இதில் அடிக்கோடிட்ட பகுதியானது முறையே பொருந்தக் கூடிய கூற்று பின்வருவனவற்றில் எது?

1) அளவு சார்ந்ததும், பண்பு சார்ந்ததுமான தரவு
2) பண்பு சார்ந்ததும், அளவு சார்ந்ததுமான தரவு
3) அளவு சார்ந்த தரவு
4) ஒரு தகவல்

02. பின்வருவனவற்றுள் தகவல் எது?

1) வகுப்பு மாணவர்கள் பெற்ற புள்ளிகள்
2)இலங்கையில் உயர் கல்விக்காக அனுமதி பெறும் மாணவர்கள்
3)ஒரு நகரத்தில் ஒரு நாள் முழுவதிலும் உள்ள வெப்பநிலை
4)மட்டக்களப்பில் இருந்து உள்ள தூரம்

03. பின்வருவனவற்றுள் அச்சுக் கருவியினதும், வலைக்கமராவினதும் சரியான தொடர்பை காட்டும் வரிசை எது?

வரிசை	அச்சுக்கருவி	வலைக்கமரா
1	உள்ளீட்டு சாதனம்	உள்ளீட்டு சாதனம்
2	உள்ளீட்டு சாதனம்	வெளியீட்டு சாதனம்
3	வெளியீட்டு சாதனம்	சேமிப்பு சாதனம்
4	வெளியீட்டு சாதனம்	உள்ளீட்டு சாதனம்

1) வரிசை 1
2) வரிசை 2
3) வரிசை 3
4) வரிசை 4

04. தகவல் ஒன்றின் பண்பு அல்லாதது

1) ஒழுங்குபடுத்தப்பட்டது
2) காலத்திற்கு பொருத்தமானது
3) கருத்தற்றது
4) அர்த்தமுள்ளது

05. பின்வரும் கூற்றுக்களை கருதுக

A- இவை முறைமை மென்பொருட்களின் கட்டளைக்கு ஏற்ப தொழிற்படும்
B- இவை இலத்திரனியல் சாதனங்களாகும்
C- இவற்றை இலகுவில் மாற்றம் செய்ய முடியாது

மேலுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான கணினிக் கூறு எது?

1) வன்பொருள்
2) மென்பொருள்
3) நிலைபொருள்
4) உயிர்ப்பொருள்

06. பின்வரும் கணினிப் பாகங்களை கருதுக

A-Web Camera B-OCR C-Joystick

இவற்றுள் கணினி உள்ளீட்டு சாதனங்களுக்கு மட்டும் உதாரணமாக அமைவது?

1) A,B
2) A,C
3) A,B,C
4) B,C

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom

Online classes

பாலர் வகுப்புக்கள்

4+ & 5+

மாணவர்களுக்கானது



திங்கள்
செவ்வாய்
வியாழன்
வெள்ளி

5.00 pm

கட்டணம்
1500/=

மேலதிக தகவலுக்கு

76667-4945

07. MICR இன் தொழிற்பாடு யாது?
1) குறிமுறையை எழுத்தெண் பெறுமானமாக மாற்றல்
2) காசோலையின் செம்மையை சோதித்தல்
3) கணினிக்கு ஒலி வடிவிலான தரவுகளை உட்செலுத்தல்
4) வன்பிரதி ஆவணம் ஒன்றை கணினிக்கு உட்செலுத்தல்

08. பல தடவைகள் தரவுகளையும் தகவல்களையும் எழுதத்தக்க சேமிப்பு சாதனங்கள் எவை?
1) CD-ROM , DVD-R
2) DVD-RW , CD-RW
3) CD-R , DVD-R
4) DVD-ROM , CD-ROM

09. நீல நிறக்கதிர்கள் மூலம் தரவுகளை எழுதக் கூடிய ஒளியியல் ஊடகச் சேமிப்பு சாதனம் எது?
1) Blue Ray Disk
2) DVD
3) CD
4) Flash Memory

10. பின்வரும் சேமிப்பு சாதனங்களை கொள்ளளவின் அடிப்படையில் இறங்குவரிசைப்படுத்தும் சரியான ஒழுங்காக அமைவது?
1) காந்தநாடா, நெகிழ்வட்டு, வன்வட்டு, நினைவக அட்டை
2) நெகிழ்வட்டு, வன்வட்டு, நினைவகப் பதியி, பதுக்கு நினைவகம்
3) இறுவட்டு, வன்வட்டு, காந்தநாடா, நினைவகப் பதியி
4) காந்தநாடா, வன்வட்டு, நினைவக அட்டை , நெகிழ்வட்டு

11. பின்வருவனவற்றுள் அழிதாக நினைவகம் எது?
1) RAM
2) ROM
3) Cache Memory
4) Register

12. பின்வரும் தொடர்பாடல் ஊடகங்களில் எது தரவுகளை ஊடுகடத்துவதற்கு ஒளித்தெறிப்பை பயன்படுத்துகின்றது?
1) UTP
2) Optical Fiber
3) STP
4) Coaxial Cable

13. பின்வருவனவற்றுள் ENIAC கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
1) 1946
2) 1948
3) 1973
4) 1949

14. ஒன்றிணைக்கப்பட்ட சுற்று பயன்படுத்தப்பட்ட கணினி தலைமுறை
1) முதலாம் தலைமுறை
2) 2ம் தலைமுறை
3) 3ம் தலைமுறை
4) 4ம் தலைமுறை

15. முதலாவது நுண்செயலிக்கு உதாரணமாக அமைவது
1) Intel 4004
2) Intel8088
3) Intel8086
4) Intel 80186

16. சூழலில் உள்ள, அமுக்கம், வெப்பநிலை போன்ற சமிக்ஞைகளை இனங்கண்டு தொழிற்படும் கணினிகள் எவ்வகையான கணினியில் உள்ளடங்கும்?
1) கலப்பினக் கணினிகள்
2) இலக்கமுறை கணினிகள்
3) பெருமுகக் கணினிகள்
4) ஒத்திசைக் கணினிகள்

17. Blais Pascal கண்டுபிடித்த உபகரணம் எது?
1) கூட்டற்பொறி
2) படி கணக்கிடலி
3)வித்தியாசப்பொறி
4) துளையட்டை

18. பின்வருவனவற்றுள் காந்த ஊடக சாதனமாக அமையாதது?
1) நெகிழ்வட்டு
2) காந்தநாடா
3) வன்வட்டு
4) நினைவக அட்டை

19. லேசர் அச்சுப்பொறியில் பயன்படுத்தப்படும் அச்சீட்டுக்கான மைப்பொடி எது?
1) டோனர்
2) காட்ரிஜ்
3) ரிபன்
4) வெப்பம்

20. பின்வருவனவற்றுள் சுட்டும் சாதனம் அல்லாதது
1) சுட்டி
2) ஒளிப்பேனா
3) நுணுக்குப்பன்னி
4) இயக்குப்பிடி

21. வலையமைப்பொன்றில் தரவுப்பரிமாற்றத்தை மேற்கொள்ள சிறந்த தரவுப் பரிமாற்று ஊடகத்தை தெரிவு செய்தல் அவசியமாகும். கீழுள்ள தரவுப்பரிமாற்று ஊடகங்களில் விரைவான ''பரிமாற்று ஊடகம்'' யாது?

1) Coaxial Cables
2) Unshielded Twisted Pair Cables
3) Fiber Optical Cables
4) Shielded Twisted Pair Cables

22.கீழுள்ள அட்டவணைகளில் உரிய துறைகளுக்கு பொருத்தமான கணினியின் பாகங்களை சரியாக இணைத்துக் காட்டுவது எது?

Computer Ports	**Connected parts/Device**
1. Serial Port	A. Modem
2. VGA Port	B. Digital Camera
3. Parallel Port	C. Printer
4. USB Port	D. Monitor

1) 1-A, 2-D, 3-C, 4-B
2) 1-C, 2-D, 3-A, 4-B
3) 1-C, 2-A, 3-D, 4-B
4) 1-B, 2-C, 3-A, 4-B

23. மத்திய செயற்பாட்டலகின் ''கடிகாரக்கதி'' இனை அளக்கப் பயன்படும் அலகு

1) MBPS
2) MHz
3) GBS
4) ISP

24. VLSI தொழிநுட்பம் எத்தலைமுறை கணினிகளில் பயன்படுத்தப்பட்டது?

1) 1ம் தலைமுறை
2) 2ம் தலைமுறை
3) 3ம் தலைமுறை
4) 4ம் தலைமுறை

25. தரவு உள்ளீட்டிற்காக சுட்டி, விசைப்பலகை மற்றும் தரவு சேமிப்பிற்காக நெகிழ்வட்டு (Floppy Disk) என்பன பயன்படுத்தப்பட்ட கணினித் தலைமுறைகள் முறையே

1) 4ம், 2ம் தலைமுறை
2) 2ம், 3ம் தலைமுறை
4) 3ம், 2ம் தலைமுறை
4) 4ம், 5ம் தலைமுறை

26. கலப்பினை கணினிக்கு (Hybrid Computer) உதாரணமாக அமையக் கூடியது/கூடியவை எது /எவை?

1) மடிக்கணினி, ECG இயந்திரம்
2) வானிலை அளவைப் பொறி
3) மடிக்கணினி , தனியார் கணினி
4) ECG இயந்திரம்

27. பின்வரும் பதின்ம எண்களில் எது இரும எண் 01011_2 இற்கு சமவலுவுள்ளது?

1)11 2)35 3)15 4)10

28. பின்வரும் எண்களில் எது பதின்ம எண் 78 இதற்கு சமவலுவுள்ளது?

1)1101110_2 2)2667_8 3)$FA6_{16}$ 4)101110_2

29. 763_8 இன் பதின்ம சமவலு பின்வருவனவற்றுள் எது?

1)499_{10} 2)165_{10} 3)289_{10} 4)346_{10}

30. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக

A - ஒரு கணினியின் பதிவேட்டு நினைவகம் (Register Memory) ஒரு வன்வட்டிலும் பார்க்க சிறிய கொள்திறனை உடையது.

B - ஒரு வன்வட்டின் தரவு அணுகற்கதியிலும் (Access Speed) பார்க்க பதிவேட்டு நினைவகத்தின் தரவு அணுகற்கதி மெதுவானது

C - பதிவேட்டு நினைவகத்தில் தரவுகளை தேக்கி (Store) வைப்பதற்கான பிற்றுக்கிரயம் ஒரு வன்வட்டில் தரவுகளை தேக்கி வைப்பதற்கான கிரயத்திலும் உயர்ந்தது

மேற்குறித்த கூற்றுக்களில் எவை உண்மையானவை?

1) A,B ஆகியன மாத்திரம்
2) A,C ஆகியன மாத்திரம்
3) B,C ஆகியன மாத்திரம்
4) A,B,C ஆகியன மாத்திரம்

31.LCD என்பதன் விரிவாக்கம் யாது?

1) Liquid Cristal Display
2) Liquid Computer Display
3) Light Crystal Display
4) Light Computer Display

32. Keyboard ஒன்றை இணைக்கப் பயன்படுத்தப்படும் குதைகள் முறையே

1) PS/2 Port, USB Port
2) Serial Port, USB Port
3) PS/2 Port, Parallel Port
4) Monitor Port, USB Port

33. கணினியில் ஆவணம் ஒன்றை சேமிக்கப் பயன்படும் குறுவழிச்சாவி (Short cut key) எது?

1) Ctrl+A
2) Ctrl+B
3) Ctrl+S
4) Ctrl+C

34. பிரபல கணினி உற்பத்தி நிறுவனமான APPLE நிறுவனத்தின் தந்தை யார்?

1. ஸ்டீவ் ஜொப்ஸ்
2. சார்ளஸ் பபேஜ்
3. பில் கிளின்டன்
4. பில்கேட்ஸ்

35. நேரணுகல் நினைவகம் (RAM) தொடர்பாக பிழையான கூற்று பின்வருவனவற்றுள் எது?

1. இது ஒரு அழிதகு நினைவகமாகும்
2. இது தாய்ப்பலகையில் பொருத்தப்பட்டிருக்கும்
3. இது மைய முறைவழி அலகிற்குத் தேவையான தரவுகளைத் தற்காலிகமாக சேமித்து வைக்கும் இடமாகும்.
4. இதில் சேமிக்கப்பட்டுள்ள தரவுகள் கணினிக்கான மின் தொடுப்பகற்றப்பட்டவுடன் நிரந்தரமாக சேமிக்கப்படும்.

36. முதன்மை தேக்கக சாதனத்திற்கு பொருத்தமான உதாரணமாக அமைவது

1. Hard Disk
2. Compact Disk
3. Ram
4. Zip Disk

37. வன்பிரதியை வெளியீடாக தரக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

1. Pen drive
2. Monitor
3. Plotter
4. CD

38. கணினியானது நாம் வழங்கும் தரவுகளை எமது கட்டளைக்கேற்ப தயாரித்து எமக்கு தேவையான தகவல்களை தேவையான விதத்தில் வழங்குவதால் கணினியை …….. எனலாம்

1. இயந்திரம்
2. தொகுதி
3. முறைவழியாக்கி
4. தகவல் வழங்கல்

39. வானொலி அலைகள் வலிமையான காந்தப்பிரிப்பு ஆகியவற்றின் மூலம் உடலின் உட்பகுதிகளின் விபரமான ஒளிப்படங்களை பெறுவதற்கு பயன்படுத்தப்படும் சாதனம்

1.OCR Scanner
2. ECG
3. EEG
4. MRI Scanner

40. பளிங்குக் கரைசலைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் திரை பின்வருவனவற்றில் எது?

1. Multimedia Projector
2. LED
3. CRT
4. LCD


(முதலாம் வினாவும் ஏனைய 4 வினாக்களும் உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக)

(01)

1. கணினி வன்பொருள் என்பதால் யாது விளங்குவீர்? வன்பொருளுக்கு இரு உதாரணங்கள் தருக
2. Wireless Mouse இல் பயன்படுத்தப்பட்டுள்ள தொடர்பாடல் ஊடகம் எது? அது தொடர்பாடல் ஊடக வகைகளில் எவ்வகையைச் சேரும்?
3. USB Port இல் பொருத்தத்தக்க இரு துணையுறுப்புக்களை பெயரிடுக
   USB Port இன் சிறப்பியல்பு 1 தருக
4. கணினி உள்ளீட்டு சாதனங்களில் ஒளியுரு விம்பமாக்கு சாதனங்களுக்கு 2 உதாரணம் தருக
5. கணினி வன்பொருள் தொடர்பாக VDU என்பது யாது? இதனை கணினியுடன் இணைக்கப் பொருத்தமான குதை எது?
6. வங்கியொன்றுக்கு சேமிப்பிலிருந்து பணத்தினை மீளப்பெறச் செல்லும் ஒருவர் கருமபீடத்திற்கு சென்று தனது வங்கிப் புத்தகத்தையும் பண மீளப்பெறல் சீட்டையும் (Slip) ஒப்படைக்கிறார். வங்கி ஊழியர் கணினி முறைமையினூடாக குறித்த நபரது கணக்கு மீதியை அறிந்து வங்கிப் புத்தகத்தை இற்றைப்படுத்தி பணத்தையும் ஒப்படைக்கிறார். மேற்குறித்த செயன்முறையில் உள்ள உள்ளீடு முறைவழி வருவிளைவு ஆகியவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
7. நிகழ்நிலை அங்காடி (Online shopping) இன் நன்மை, தீமை ஒவ்வொன்று தருக.
8. துணை நிலைத் தேக்க சாதனங்களை வகைப்படுத்துக. திண்ம நிலை தேக்க சாதனங்களில் பயன்படுத்தத்தக்க திண்ம பொருள் ஒன்று தருக.
9. தரவுத் தொடர்பாடல் இடம்பெறும் முறைகள் எவை? அரை இருவழிப்போக்கு தொடர்பாடலுக்கு இரு உதாரணங்கள் தருக.
10. மர இடத்தியலின் நன்மை, தீமை ஒவ்வொன்று வீதம் தருக.

(2X10=20 புள்ளிகள்)

(02)



1. கணினி முறைமையொன்னின் செயற்பாடு தொடர்பான மேலுள்ள கட்டமைப்பு எப் பெயர் கொண்டு அழைக்கப்படும்?
2. A,B,C என்பன கணினி வன்பொருள் சாதனம் ஒன்றின் பகுதிகளாகும். அச்சாதனம் எது?
3. G எனப் பெயரிடப்பட்டுள்ள பகுதி எது? அப்பகுதிக்கு இரு உதாரணங்கள் தருக.
4. A,B,C,D,E,F, ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
5. இயக்குபிடி, பதுக்கு நினைவகம் ஆகியன முறையே மேலுள்ள எம் முகப்படையாளங்களுக்கு பொருத்தமானவை?
6. A இன் தொழிற்பாடு யாது?
7. முகப்படையாளம் F இல் பயன்படுத்தத்தக்க ஒரு துணையுறுப்புக்களைத் தருக
8. காந்த ஊடகச் சாதனம் என்பது மேலுள்ள எம் முகப்படையாளத்தின் வகையைச் சாரும்?

(1+1+1+3+1+1+1+1 புள்ளிகள்)

(03) 1. தரவு ஒன்றிற்கு உதாரணம் ஒன்று தருக. அவ் உதாரணம் முறைவழியாக்கத்திற்கு உட்பட்டு தகவலாக மாற்றம் பெற்றமைக்கு ஒரு உதாரணம் தருக.
2. கணினியின் வரலாறு தொடர்பாக அடா ஒகஸ்டா லவ்லேஸ் இன் பங்களிப்பு யாது?
3. சார்ள்ஸ் பபேஜினால் கண்டுபிடிக்கப்பட்ட எவ்வுபகரணம் காரணமாக அவர் கணினியின் தந்தை என அழைக்கப்படுகிறார்?
4. படி கணக்கிடலியை கண்டு பிடித்தவர் யார்?
5. 4ம் தலைமுறை கணினிகளிலிருந்து 1ம் தலைமுறை கணினிகள் வேறுபடும் விதம் பற்றி 2 விடயங்களை முன்வைக்க.
6. இணையம் பயன்படுத்தப்பட்ட கணினி தலைமுறை ஏத?
7. தகவல் ஒன்றிற்கு இருக்க வேண்டிய குணாதிசயங்கள் 2 தருக
8. மருத்துவத்துறையில் ICT இன் பயன்பாட்டைக் காட்டக்கூடிய இரு உபகரணங்களைப் பெயரிடுக.
9. EEG பொறியின் பயன்பாடு யாது?

(2+1+1+1+1+1+1+1+1 புள்ளிகள்)

(04) தரவுகள் ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு பரிமாற்றம் செய்யப்படக்கூடியவை

1. தரவுத் தொடர்பாடல் ஊடகங்களை எவ்வாறு வகைப்படுத்துவீர்?
2. முழு இரு வழித் தொடர்பாடலுக்கு இரு உதாரணம் தருக
3. செங்கீழ் கதிர்கள் பயன்படுத்தத்தக்க சந்தர்ப்பங்கள் 2 தருக? அவை தொடர்பாடல் ஊடகங்களில் எவ்வகையைச் சாரும்?
4. ஒளியியல் நார்கள் பயன்படுத்தப்படக்கூடிய சந்தர்பங்கள் 2 தருக? ஒளியியல் நார்களின் இயல்புகள் 2 தருக.
5. தரவு ஒன்று பரிமாற்றம் செய்யப்படுவதற்கு தேவையான அடிப்படையான கூறுகள் எவை?
6. கதிர்த்த ஊடகங்கள் (Unguided Media) இற்கு 2 உதாரணம் தருக.
7. தொடர்பாடல் சாதனங்களுக்கு 2 உதாரணம் தருக.

(1+1+2+3+1+1+1=10 புள்ளிகள்)

(05) கணினிகள் ஒன்றோடொன்று இணைக்கப்படுவதன் மூலம் வலையமைப்பு செய்யப்படுகின்றன.

1. வலையமைப்பின் தீமைகள் 2 தருக.
2. LAN வலையமைப்பின் இயல்புகள் 2 தருக.
3. வலையமைப்பு இடத்தியல் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

    a) கம்பிகள் குறைவாகத் தேவைப்படும் அதேவேளை அமைக்கவும் பராமரிக்கவும் இலகுவான இடத்தியல் எது?
    b) வலையமைப்பின் மத்தியமயப்படுத்தப்பட்ட அலகு (MAU) செயலிழந்தால் முழு வலையமைப்பும் சேதமடையும் இடத்தியல எது?
    c) கிளைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அதேவேளை சிக்கலான இடத்தியல் எது?
    d) இரு வழித் தரவுப் பரிமாற்றம் இடம்பெறும் இடத்தியல் எது?
4. வலையமைப்பில் பயன்படுத்தத்தக்க சாதனங்கள் 2 தருக
5. தீச்சுவரின் பயன்பாடு யாது?
6. எமது பாடசாலையின் கணினி வலையமைப்பிற்கு பொருத்தமான வலையமைப்பு வகை எது?
7. வலையமைப்பின் நன்மைகள் 2 தருக.

(1+1+4+1+1+1+1=10 புள்ளிகள்)

(06) 1. சுட்டும் உள்ளீட்டு சாதனங்களுக்கு இரு உதாரணம் தருக.
2. RAM இன் பயன்பாடு யாது?
3. Cache Memory, Memory Register, RAM, Flash Memory, Magnetic Tape ஆகிய சேமிப்பு சாதனங்களை கொள்ளளவின் அடிப்படையில் ஏறு வரிசைப்படுத்துக.
4. OCR, Flatbed Scanner ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள் 2 தருக.
5. உள்ளீட்டு சாதனங்களில் Scanner இன் வகைக்குள் அடங்கும் உள்ளீட்டு சாதனங்களுக்கு 3 உதாரணம் தருக.
6. காந்த ஊடகச் சாதனங்கள் 3 தருக. அவற்றில் தற்போது பயன்பாட்டிலிருந்து நீங்கியுள்ள இரு சாதனங்களை பெயரிடுக.
7. LED திரையின் இயல்புகள் 2 தருக.

(1+2+2+2+1+1+1=10 புள்ளிகள்)

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம்
01

தமிழ்	புதன் மற்றும் வியாழன் 6.00 - 7.00 pm
கணிதம்	சனி 9.00 - 10.00 am
சுற்றாடல்	செவ்வாய் மற்றும் வெள்ளி 6.00 - 7.00 pm
ஆங்கிலம்	ஞாயிறு 9.00 - 10.00 am
Spoken English	திங்கள் 6.00 - 7.00 pm

76667-4945

2024 zoom Online class

மட்/மம/மில்லத் மகளிர் மகாவித்தியாலயம், காத்தான்குடி

கொரோனா விடுமுறை கால செயலட்டை - 2020

தரம் - 10	சுகாதாரமும் உடற்கல்வியும்	நேரம்: 3 மணித்தியாலங்கள்
சுட்டெண்/பெயர் :		புள்ளி:

பகுதி - I

சரியான விடையைத் தெரிவு செய்க.

01. பூரண சுகாதாரத்தில் அடங்கும் துறைகளைக் கொண்ட தொகுதி
    1. உடல், உள, சமூக, ஆன்மீகம் 2. உடல், உள, கல்வி, சமயம்
    3. உடல், உள, சமூக, கல்வி 4. உடல், சமயம், சமூக, கல்வி
02. உடற்திணிவுச் சுட்டியைக் கணிக்கப் பயன்படுத்தப்படுவது
    1. $\frac{\text{உயரம்(m)}}{\text{நிறை(kg)}}$ 2. $\frac{\text{நிறை(kg)}}{\text{உயரம்(m)}}$ 3. $\frac{\text{உயரம்(m)}}{\text{நிறை(kg)}\times\text{நிறை(kg)}}$ 4. $\frac{\text{நிறை(kg)}}{\text{உயரம்(m)}\times\text{உயரம்(m)}}$
03. 6-10 வரையான வயதுப் பருவம்
    1. பிள்ளைப் பருவம் 2. முன் பிள்ளைப் பருவம்
    3. சிசுப் பருவம் 4. முன் பிரவசப் பருவம்
04. சந்தத்துடனான கை, கால்களின் அசைவு எச்செயற்பாடுகளில் காணப்படும்?
    1. சுகநல அப்பியாசம் 2. உடற்பயிற்சிக் கண்காட்சி
    3. ஜிம்னாஸ்ரிக் 4. மேற்கூறிய யாவும்
05. குறுந்தூர ஓட்ட நிகழ்ச்சிகளுள் அடங்கும் தொகுதியாக அமைவது
    1. 100m, 200m 2. 400m, 800m 3. 100m, 800m 4. 110mH, 800m
06. பாடசாலை இடைவேளையின் போது மாணவர்கள் மைதானத்தில் நடத்தல், ஓடுதல், பாய்தல் போன்ற செயற்பாடுகளிலீடுபடுகின்றனர். இச்செயற்பாடுகள்
    1. அசையும் கொண்ணிலை 2. அசையாத கொண்ணிலை
    3. பிழையான கொண்ணிலை 4. பாத அசைவுகள்
07. பரம்பரை நோயாகக் கருதப்படுவது
    1. பெரியம்மை 2. தலசீமியா
    3. தைபொயிட்டுக் காய்ச்சல் 4. பெரிபெரி
08. யாதாயினும் ஒரு பொருளின் நிறை செயற்படும் புள்ளி எவ்வாறு அழைக்கப்படும்?
    1. நிறை 2. புவியீர்ப்பு மையம்
    3. சமநிலை 4. இடப்பெயர்ச்சி
09. மேலதிக உடல் நிறையைக் கொண்டள்ள ஒருவருக்கு ஏற்படக் கூடிய நோய்
    1. உயர்குருதியமுக்கம் 2. மூட்டுவலி
    3. நீரிழிவு 4. மேற்கூறிய யாவும் சரி
10. அஞ்சல் கோல் மாற்றும் பிரதேசத்தின் அளவாக அமைவது
    1. 10m 2. 20m 3. 30m 4. 40m
11. ஒருவரின் உடலின் கொண்ணிலைக்கேற்ப புவியீர்ப்பு மையத்தின் அளவு
    1. மாறுபடாது 2. மாறுபடும் 3. குறையும் 4. யாவும் சரி
12. உடற்தகைமைக் காரணியாக அமைவது
    1. வேகம் 2. எறிதல் 3. பாய்தல் 4.ஓடுதல்
13. தனது ஆரோக்கியம் போன்று தனது சமூகத்தின் ஆரோக்கியத்தையும் உயரத்துவது
    1. சுகாதாரமாகும் 2. அபிவிருத்தியாகும்
    3. சுகாதார மேம்பாடாகும் 4. சுகாதார மார்க்கமாகும்
14. சுகாதாரத்திற்குப் பொருத்தமற்ற வாழ்க்கைக் கோலம் பின்வருவனவற்றுள் எது?
    1. போதியளவு ஓய்வு 2. போதியளவு உடற்பயிற்சி
    3. போதியளவு உறக்கம் 4. பொருத்தமற்ற பாலியல் நடத்தை
15. வொலிபோல் விளையாட்டில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை
    1. 8 2. 6 3. 11 4. 7

16. ஒருவருடைய தாங்கும் பாதங்களுக்கிடையிலான அகலம் அதிகரிக்கும் போது ஏற்படுவது
    1. அவரது சமநிலை அதிகரிக்கும் 2. அவரது சமநிலை குறைவடையும்
    3. புவியீர்ப்பு மையம் கூடும் 4. புவியீர்ப்பு மையம் குறையும்
17. பேற்றுக் கெய்தல் எவ்விளையாட்டின் திறனாக அமையும்?
    1. வலைப்பந்து 2. கரப்பந்து 3. கூடைப்பந்து 4. மேசைப்பந்து
18. சமீம் முன்பள்ளியில் கற்கும் ஒரு மாணவனாவான். அவனது தாயார் உறவினர் வீடுகளுக்குச் செல்லும் வேளையில் அவனையும் அழைத்துச் செல்வதுடன், சமவயதுக் குழுவினருடன் விளையாட சந்தர்ப்பம் வழங்குவார். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது
    1. உலியல் தேவை விருத்தி 2. உளவியல் தேவை விருத்தி
    3. சமூகத் தேவை விருத்தி 4. ஆன்மீகத் தேவை விருத்தி
19. தற்காலத்தில் சுகாதாரத்திற்கு எதிரான சவால்களாகக் குறிப்பிடப்படுவது
    1. கல்வி தொடர்பான பிரச்சினைகள் 2. இடம்பெயரல்
    3. சனத்தொகைப் பெருக்கம் 4. மேற்கூறிய யாவும் சரி
20. உடற்திணிவுச் சுட்டி 30 ஐ விட அதிகரிக்கும் போது ஒருவரிடம் காணக்கூடிய இயல்புகள்
    1. சுறுசுறுப்பு 2. பரவாத நோய்களுக்கு ஆளாகுதல்
    3. வினைத்திறன் 4. நீண்ட ஆயள்

(20 புள்ளிகள்)

பகுதி - II

முதலாம் வினா உட்பட ஏனைய 4 வினாக்கள் மொத்தமாக 5 வினாக்களுக்கும் விடையளிக்குக.

01. சுகாதாரம் எனக்கு மகிழ்வைத் தரக்கூடியது. வாழ்வின் தரத்தை உயர்த்துவதற்கு சுகாதார மேம்பாடு இன்றியமையாததாகும். பிள்ளைகளின் பருவத்திற்கேற்ப அவர்களின் திறமைகள் வெளிக்காட்டப்பட வேண்டும். அவர்கள் அன்றாடச் செயற்பாடுகள்ஈ விளையாட்டுக்களில் ஈடுபடும் போது சரியான கொண்ணிலைகளை வெளிக்காட்டுவதுடன் வாழ்வில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு மனவழுத்தத்தைக் குறைத்து மகிழ்ச்சியான வாழ்வை மேற்கொள்ள வேண்டும்.

1. பூரண ஆரோக்கியம் என்றால் என்ன?
2. உடல் ஆரோக்கிய வாழ்வைப் பேண அவசியமான காரணிகள் 2தருக.
3. ஆன்மீக ஆரோக்கியம் பேண அவசியமான காரணிகள் 2 தருக.
4. பிள்ளைப் பருவத்தின் வயதெல்லை யாது?
5. எமது அன்றாட வாழ்வில் நாம் எதிர்நோக்கும் சவால்கள் 2 தருக.
6. மனவழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் 2இனைக் குறிப்பிடுக.
7. சுகாதார மேம்பாடு என்பதனால் கருதப்படுவது யாது?
8. பிள்ளைகளிடம் காணக்கூடிய விஷேட ஆற்றல்கள் 2 தருக.
9. மனமகிழ்வை ஏற்படுத்தும் நிகழ்வுகள் 2இனைக் குறிப்பிடுக.
10. சிறுவர்களின் உடற்திணிவுச் சுட்டியில் செல்வாக்கச் செலுத்தும் காரணிகள் 2 தருக.

(20 புள்ளிகள்)

02. 1. சரியான கெண்ணிலை என்றால் என்ன?
2. கொண்ணிலையைப் பாதிக்கும் உயிரியற் பொறிமுறைக் காரணிகள் 2 தருக.
3. சமநிலை என்றால் என்ன?
4. பல்வேறு கெண்ணிலைகளின் போது சமநிலையைப் பேணும் காரணிகள் 2 தருக.

(10 புள்ளிகள்)

03. 1. வெளிக்களச் செயற்பாடு என்றால் என்ன?
2. வெளிக்களச் செயற்பாடுகள் 2 தருக.
3. வெளிக்களச் செயற்பாட்டின் போது கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் 2 தருக.
4. வெளிக்களச் செயற்பாட்டின் பயன்கள் 2 தருக.

(10 புள்ளிகள்)

04. 1. மேய்வல்லுநர் விளையாட்டு நிகழ்ச்சிகளுல் அடங்கும் ஓட்ட நிகழ்ச்சிகள் 2 இனையும் பாய்தல் நிகழ்ச்சிகள் 2 இனையும் குறிப்பிடுக.

2. ஓட்டப்புறப்பாட்டின் வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொரு புறப்பாட்டு முறைக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
3. ஏறிதல், போடுதல் 2 இனை குறிப்பிடுக.
4. நிலைக்குத்துப் பாய்ச்சலுக்கு 2 உதாரணம் தருக.

(10 புள்ளிகள்)

05. பின்வரும் விளையாட்டுக்களில் (கரப்பந்து, வலைப்பந்து, காற்பந்து) ஏதாவதொன்றைத் தெரிவு செய்து அவை தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.

I) 1. கரப்பந்து விளையாட்டின் திறன்கள் 2 தருக.
2. அறைதல் திறனின் நுட்பங்கள் 2 தருக.
3. தடுத்தல் திறனின் நுட்பங்கள் 2 தருக.
4. அறைதல் திறனை மேம்படுத்துவதற்கான செயற்பாடு ஒன்றினைத் தருக.

(10 புள்ளிகள்)

II) 1. வலைப்பந்து விளையாட்டின் திறன்கள் 2 தருக.
2. வலைப்பந்து விளையாட்டில் பந்து மாற்றும் முறைகள் 2இனைத் தருக.
3. வலைப்பந்து விளையாட்டில் பந்தை எறிதலும், பெற்றுக் கொள்ளலுக்குமான திறன்களைப் பயில்வதற்கு மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் 2 தருக.
4. வலைப்பந்து விளையாட்டில் காத்தல் திறனைப் பயில்வதற்கு மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு ஒன்றினைத் தருக

(10 புள்ளிகள்)

III) 1. காற்பந்து விளையாட்டின் திறன்கள் 2 தருக.
2. காற்பந்து விளையாட்டில் உதைத்தல் திறனில் அடங்கும் உதைத்தல் முறைகள் 2 தருக.
3. பந்தைத் தடுக்கும் முறைகள் 2 தருக.
4. காற்பந்து விளையாட்டில் உதைத்தல் திறனைப் பயில்வதற்கு மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு ஒன்றினைத் தருக

(10 புள்ளிகள்)

மட்/மம/மில்லத் மகளிர் மகாவித்தியாலயம், காத்தான்குடி

கொரோனா விடுமுறை கால செயலட்டை - 2020

தரம் - 10	மனைப்பொருளியல்	நேரம் : 3 மணித்தியாலங்கள்
சுட்டெண் /பெயர் :		புள்ளி :

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் உரித்தான சமூக அலகு

1.பாடசாலையாகும் 2. வீடாகும்

3. குடும்பமாகும் 4. கல்வியாகும்

2. குடும்பம் என்பது பொருளாதார ரீதியாகவும் பிள்ளைகளை வளர்க்கும் போதும் ஒற்றுமையாக செயற்படும் எனக் கூறியவர்

1. கதலின் ஹக் 2. ஹொக்
2. பவளொசி 4. ஜி.பி.மார்டொக்

3. குடும்பத்தின் பிரிவானது

4. 3வகை 2. 4வகை
5. 3. 2வகை 4. 6வகை

4. கருக் குடும்பத்தின் மறு பெயராகக் கொள்ளப்படுவது

1. விரி குடும்பம் 2. கூட்டுக்குடும்பம்
3 தொடர் குடும்பம் 4. ஆரம்பக் குடும்பம்

5. கூட்டுக் குடும்பம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது

1 கணவன் மட்டும் 2 மனைவி மட்டும்
3 கணவன் மனைவி மட்டும்
4 கணவன் மனைவி பிள்ளைகள் உறவினர்கள் சேர்ந்தது

6. குடும்பம் எனப்படும் குடும்ப அலகு பல்வேறு கால பருவங்களைக் கடக்கும். ஆவையாவன முறையே

1 முதிர்ச்சிப் பருவம் வளர்ச்சிப் பருவம் ஆரம்பப் பருவம்
2 ஆரம்பப் பருவம் குதிர்ச்சிப் பருவம் வளரச்சிப் பருவம்
3 வளர்ச்சிப் பருவம் ஆரம்பப் பருவம் முதிர்ச்சிப் பருவம்
4 ஆரம்பப் பருவம் வளர்ச்சிப் பருவம் முதிர்ச்சிப் பருவம்

7. குடும்பத்தின் தேவைகளுள் உளவியல் தேவைகளாகக் கொள்ளப்படுவது

1 போக்குவரத்து 2 உணவு
3 ஒத்துழைப்பு 4 திருப்தி

8. மனை தொடர்பாக கருத்துக்களை முன்வைத்த விஞ்ஞானி

1 மார்டொக் 2 வில்லியம் கில்பிரட்
3 பிளேட்டோ 4 ஹொக்

9. மனை ஒன்றைக் கட்டுவதற்கு நிலத்தைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியது

1 பிரச்சினையற்ற காணி 2 தளத்திட்டம்
3 மின்சாரம் 4 உழைப்பு

10. சாதாரண வீட்டிலுள்ள அறைகள் பின்வருமாறு

1 சமையலறை களஞ்சியறை நூலக அறை
2 படுக்கையறை சமையலறை வரவேற்பறை மலசலகூடம் குளியலறை
3 படுக்கையறை சாப்பாட்டறை குளியலறை
4 வரவேற்பறை படுக்கையறை சமையலறை

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம்
02

தமிழ்	செவ்வாய் 7.00 - 8.00 pm வெள்ளி 6.00 - 7.00 pm
கணிதம்	புதன் 6.00 - 7.00 pm சனி 8.00 - 9.00 am
சுற்றாடல்	வியாழன் மற்றும் சனி 6.00 - 7.00 pm
ஆங்கிலம்	ஞாயிறு 6.00 - 7.00 am
Spoken English	திங்கள் 6.00 - 7.00 pm

76667-4945

2024 zoom Online class

11. வீட்டினுள் இயற்கையாக ஒளியையும் வளியையும் பெறக்கூடிய வழிவகை
    1 மின்குமிழ் அமைத்தல்
    2 காற்றிடைவெளிகள் அமைத்தல்
    3 கூரையின் உயரத்தை பதிவாக்கல்
    4 யன்னல்களை மூடிவைத்தல்
12. இயற்கை ஒளியும் வளியும் வீட்டிற்குக் கிடைப்பதனால்
    1 ஈரத்தன்மை அகற்றப்படும்
    2 ஈரத்தன்மை கூடும்
    3 நுண்ணங்கிகள் பெருகும்
    4 தூர்நாற்றம் ஏற்படும்
13. முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அறைகளின் அமைப்பு முறையே
    1 விறாந்தைக்கு அருகில் படுக்கையறை
    2 வரவேற்பறைக்கு அருகில் சமையலறை
    3 களஞ்சியவறைக்கு அருகில் குளியலறை
    4 சமையலறைக்கு அருகில் சாப்பாட்டறை
14. பல் தொழிற்பாட்டு அலகுகள் என்பதால் விளங்கிக் கொள்வது
    1 ஒரு தேவையின் பூர்த்தி
    2 பல தேவையின் பூர்த்தி
    3 சமையலறையின் செயற்பாடுகளுக்கானது
    4 வரவேற்பறையின் செயற்பாடுகளுக்கானது
15. பல் தொழிற்பாட்டு தளபாடமானது
    1 அடுக்குக் கட்டில்
    2 கதிரையும் மேசையும்
    3 அலுமாரி
    4 கட்டில்
16. மனித வளமானது
    1 எரிபொருள்
    2 நீர்
    3 மனப்பாங்கு
    4 பணம்

17. பௌதீக வளமானது
    1 காலம்
    2 மின்சாரம்
    3 இடவசதி
    4 அறிவு
18. உணவுத் தொகுதிகளாகக் கருதப்படுவது
    1 மீன், இறைச்சி, முட்டை
    2 மரக்கறிகள்
    3 அரிசி, மீன், முட்டை
    4 அகத்தி, அப்பிள், மீன்
19. போசனைப் பதார்த்தங்களின் அடிப்படைப் பிரிவு
    1 1வகை
    2 2வகை
    3 4வகை
    4 6வகை
20. மொனோசக்கரைட்டின் மூலக்கூற்றுச் சூத்திரம்
    1 $C_6H_{12}O_6$
    2 $C_{12}H_{22}O_{11}$
    3 $C_6H_{12}O_5$
    4 $C12H_{21}O_6$

21. காபோவைதரேற்று மூலக்கூற்றின் பிரிவுகள்
    1 3வகை
    2 4வகை
    3 2வகை
    4 6வகை
22. பல்சக்கரைட்டுகளில் ஒன்று
    1 இலற்றோஸ்
    2 கலற்றோஸ்
    3 சுக்றோஸ்
    4 கிளைக்கோஜன்
23. அத்தியாவசியமான அமினோவமிலங்கள்
    1 5
    2 10
    3 9
    4 2
24. இலாஸ்டின் புரதம் அடங்கியுள்ள உணவு
    1 மீன்
    2 கோதுமை
    3 இறைச்சி
    4 முட்டை
25. நைதரசன் மூலகத்தை பிரத்தியேகமாகக் கொண்டுள்ள போசனைக்கூறு
    1 கொழுப்பு
    2 புரதம்
    3 காபோவைதரேற்று
    4 கனியுப்பு
26. நிரம்பிய கொழுப்பமிலங்களில் ஒன்று
    1 லினோலயிக் அமிலம்
    2 ஒலேயிக் அமிலம்
    3 அரக்கிடோனிக் அமிலம்
    4 பியூத்திரிக் அமிலம்
27. நீரில் கரையும் விற்றமின்களாவன
    1 B,A
    2 B,D
    3 B,C
    4 A,E

28. விற்றமின் B இன் மறு பெயர்

1 ரைபோபிளேவின் 2 தயமின்
3 நயசின் 4 பிரிடொக்சின்

29. பிரிடொக்சின் (B6) அமைந்துள்ள உணவுகளாவன
1 சோயா அவரை பசளி கோவா
2 ஈரல் கீரை கோவா
3 பசளி மீன் கீரை
4 மாமைட் இறைச்சி மீன்

30. மாலைக்கண் குறைபாட்டு நோய்

1 விற்றமின் B யால் 2 விற்றமின் C யால்
3 விற்றமின் A யால் 4 விற்றமின் D யால்

31. தைரொட்சின் ஓமோன் உற்பத்தி அனுசேபத்தைக் கட்டுப்படுத்துவது
1 அயடீன் 2 கல்சியம்
3 குளோரீன் 4 இரும்பு

32. மல நீக்கத்தை இலகுவாக்குவது
1 முட்டை 2 நீர்
3 இறைச்சி 4 மீன்

33. உடற்கட்டமைப்பில் அதிகளவு அடங்கியுள்ளது
1 நீர் 2 புரதம்
3 விற்றமின் 4 இரும்பு

34. நுண் கனியுப்புக்களில் ஒன்று
1 கல்சியம் 2 காந்தகம்
3 சோடியம் 4 இரும்ப

35. வளர்ச்சி குன்றல் பல் என்பு விகாரமடைதல் நரம்புகள் பலவீனம் போன்ற நோய்கள் ஏற்படக் காரணம்
1 மக்னீசியம் 2 பொற்றாசியம்
3 பொஸ்பரஸ் 4 கல்சியம்

36. பிரதான உணவு வேளைகள்
1 3 2 2
3 1 4 5

37. உணவுக்கூம்பகத்தில் கீழேயுள்ள உணவுத் தொகுதி
1 மரக்கறிகளும் பழங்களும்
2 பாலும் பாலுற்பத்திகளும்
3 சீனி கொழுப்பு எண்ணெய்
4 தானியங்களும் தானிய உற்பத்திகளும் கிழங்கு வகைகளும்

38. மிகக் குறைந்த அளவில் உள்ளெடுக்க வேண்டிய உணவுகளாவன
1. கொழுப்பும் சீனியும்
2. மரக்கறிகளும் பழங்களும்
3. தானிய வகை
4. பாலும் பாலுற்பத்திகளும்

39. பேரீச்சம்பழத்தை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் எப்போசணைக் குறைபாட்டைத் தவிர்க்கலாம்

1. கல்சியம் 2. இரும்பு
3. அயடின் 4. புளோரின்

40. உயர் போசணைப் பெறுமானம் உடைய காலை உணவுப் பட்டியல் எது?
1. இலைக்கஞ்சி பழம்
2. பிஸ்கட் பழப்பாகு
3. பாண் ஜெம்
4. இடியப்பம் தேங்காய்ச் சம்பல்

(40 புள்ளிகள்)

பகுதி - I

முதலாம் வினா கட்டாயமானது முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்கள் அடங்கலாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

பண்டாரக் குடும்பம் தாய் தந்தை முன் பிள்ளைப் பருவத்தில் உள்ள பிள்ளையைக் கொண்டுள்ளது. குடும்பம் என்பது பொருளாதார ரீதியாகவும் பிள்ளைகளை வளர்க்கும் போதும் ஒற்றுமையாக செயற்படும். ஒரு வீட்டினுள் வாழும் திருமணமான தம்பதி அல்லது நிறைவான வயதடைந்த உறவினர்கள் சேர்ந்த அலகாகும் என அறிஞர்கள் கூறியுள்ளார்கள். குடும்ப அங்கத்தவர் ஒருவரின் பணிகள் பலவகையானவை. அப் பணிகள் குடும்பத்தால் நிறைவேற்றப்பட வேண்டும் என வகுக்கப்பட்டுள்ளது. உடலுக்கு பல்வேறு பயன்களை அழிப்பதுடன் உடலுக்கு தீங்கு அளிக்காத திண்ம அல்லது திரவ பதார்த்தங்கள் உணவை வழங்குகின்றது. இவ்வுணவுகள் தாவரங்கள் விலங்குகள் மூலம் கிடைக்கின்றது. இக் குடும்பத்தில் உள்ள தாயார் வேலைக்குச் செல்வதில்லை இவர் வீட்டுத்தோட்டம் செய்வதிலும் ஆர்வம் உள்ளவர். தமக்குத் தேவையான பழங்கள் மரக்கறிகள் மீன் பாண் வாங்குவதிலும் வல்லமை படைத்தவர்.

01. குடும்பம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
02. குடும்பம் பற்றி வரைவிலக்கணம் கூறிய அறிஞர்களின் பெயர்களைத் தருக?
03. உணவு என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
04. உணவின் பிரதான தொழிற்பாடுகள் இரண்டை எழுதுக
05. வீட்டுத் தோட்டம் செய்வதால் ஏற்படும் நன்மைகளைத் தருக?
06. குடும்பத்தின் சமூகத் தேவைகள் என்பதால் கருதப்படுவது யாது?
07. குடும்பப் பணிகளை அட்டவணைப்படுத்துக.
08. போசணையை வரைவிலக்கணப்படுத்துக.
09. போசணைப் பதார்த்தங்களை வரிசைப்படுத்துக.
10. உணவுக் கூம்பகத்தின் உச்ச நிலை உணவு வகைகள் எவை?

(20புள்ளிகள்)

02. 01. தனிக்குடும்பத்தினை வரைவிலக்கணப்படுத்தி அதற்கான மறுபெயர்களைத் தருக?
    02. விரி குடும்பம் என்றால் என்ன?
    03. குடும்பத் தேவைகளை அட்டவணைப்படுத்துக?
    04. குடும்பத்தில் தாய் தந்தைக்கான பணிகள் இவ்விரண்டு வீதம் எழுதுக?

(10 புள்ளிகள்)

03. 01. மனிதனுக்கு மனை எவ்வகையில் உதவுகின்றது.
    02. மனையைக் கட்டுவதற்கு நிலத்தை தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்களைத் தருக.
    03. இயற்கை ஒளியையும் வளியையும் வீட்டிற்குள் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?
    04. அவ்வாறு பெற்றுக் கொள்வதால் ஏற்படும் நன்மைகளைத் தருக?
    05. வீட்டிற்கான தளத்திட்டம் வரையும் இரண்டு முறைகளையும் எழுதுக?

(10 புள்ளிகள்)

04. 01. பல் தொழிற்பாட்டு அலகுகள் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
    02. பல் தொழிற்பாட்டுத் தளபாடங்கள் எவை?
    03. மனையின் வளங்களை வகைப்படுத்துக?

(10 புள்ளிகள்)

05. 01. உணவுத் தொகுதிகளை உதாரணங்களுடன் எழுதுக?
    02. ஒட்சியேற்ற மாதிரிகள் அடங்கியுள்ள பழங்கள் எவை?
    03. காபோவைதரேற்றை வகைப்படுத்துக?

(10 புள்ளிகள்)

06. 01. அத்தியவாசிய அமினோ அமிலங்கள் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
    02 அத்தியவசியமற்ற அமினோஅமிலங்கள் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
    03. கொழுப்பின் தொழில்கள் 3 தருக?

(10 புள்ளிகள்)

07. 01. கூட்டு உயிர்க்கத்துகளான பின்வருவனவற்றின் விஞ்ஞானப் பெயர்களைத் தருக?
    B1 , B2, B3 ,B6, B12
    02. விற்றமின் CD அடங்கிய உணவுகள் தொழிற்பாடுகள் குறைபாட்டு நோய்கள் இவ்விரண்டு தருக?
    03. உணவு வேளையைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய விடயங்களை எழுதுக?

(10 புள்ளிகள்)

மட்/மம/மில்லத் மகளிர் மகாவித்தியாலயம், காத்தான்குடி

கொரோனா விடுமுறை கால செயலட்டை - 2020

தரம் - 10	தமிழ் இலக்கிய நயம்	நேரம்: 3 மணித்தியாலங்கள்
சுட்டெண்/பெயர் :		புள்ளி:

பகுதி - I

பகுதி I, பகுதி II ஆகியவற்றிலுள்ள 3 வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிப்பதோடு பகுதி3 இலுள்ள 4 வினாக்களுக்குள் எவையேனும் 2 வினாக்களைத் தெரிந்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. புத்தகசாலை எனும் கவிதையை எழுதிய பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?

2. புத்தக வாசிப்பில் மூழ்கிய போது கவிஞர் கண்டவைகள் எவை?

3. பத்தி எழுத்து என்றால் என்ன?

4. மனிதனுக்கும் மரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி கவிக்கோ அப்துல் ரஹ்மான் ஒப்பிட்டுக் கூறுவதில் இரண்டினைக் கூறுக.

5. மனிதன் படைத்த மரங்கள் என பத்தியாளரால் குறிப்பிடப்படுபவை எவை?

6. "போர்க்களத்தில் பகை வரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே" ஓ……..

அ. இக்காட்சி இடம்பெறும் இலக்கியம் எது?

ஆ. இது யாரால் எழுதப்பட்டது?

7. வாய்மொழிப் பாடல்களை வேறு எவ்விதம் அழைப்பார்கள்? வாய்மொழிப் பாடல்கள் யாரால் பாடப்பட்டவை?

8. "முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் வரல்"

அ. இப் பாடலைப் பாடிய புலவர் யார்?

ஆ. இப் பாடலடியில் இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

9. கடிநகர், செவிலித்தாய் என்பவற்றின் பொருளைத் தருக.

10. அமுதம் என்ற பாடலைப் பாடிய கவிஞர் யார்?

(4x5=20 புள்ளிகள்)



LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

Tamil & English Medium





ONLINE EDUCATION

PRESCHOOL to A/LEVEL



facebook

for more inquries

076667 - 4945

02. கீழ்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்
இனிந்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசை கேட்டேன்! மணம் மோந்தேன்! சுவைகள் உண்டேன்!
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகா சோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மகப் பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கில்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

அ. கவிஞரின் மனமொன்றிய புத்தக வாசிப்பை வெளிப்படுத்தி நிற்கும் தொடர் யாது?
ஆ. புத்தக வாசிப்பில் கவிஞர் பெற்ற அனுபவம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது?
இ. இங்கு கையாளப்பட்டுள்ள உவமை அணியை இனங்கண்டு விளக்குக.
ஈ. இருளாக உருவகிக்கப்பட்டிருப்பது யாது?
உ. ''மகா சோதியில் கலந்தது எனது நெஞ்சம்'' எனும் தொடரில் நீர் காணும் நயத்தை விவரிக்குக.

(5x5=25புள்ளிகள்)

பகுதி - II

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

''போர்க்களத்தில் பகை வரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே'' ''ஓ'' என அலரும் ஒரு போர்வீரனைக் காமத்துப் பாலில் காட்டுகிறார் வள்ளுவர்.

வன்மையின் வெற்றி புறவயமானது மென்னையின் வெற்றி அகவயமானது. ஆண் புறவயமாகவே பெண்ணை ஆள முடியும். பெண்ணோ ஆணை அகவயமாக ஆள்கிறாள்.

வன்மையால் மண்ணைத்தான் பிடிக்க முடியும். மனங்களைப் பிடிக்க மென்மைதான் உதவும். வன்மையாளர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கின்றது. மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கிறது. வன்மையின் வெற்றிக்க அற்பாயுசு. மென்மையின் வெற்றிக்கோ தீர்க்காயுசு. உண்மையில் மென்மையே வன்மை.

அ. போர்வீரனின் வலிமை எதற்குத் தோற்றுப் போவதாக திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

ஆ. இவ்வுரைப்பகுதியில் புறவயமானது, அகவயமானது எனக் குறிப்பிடப்படுபவை யாவை?

இ. வன்மையானவர்கள், மென்மையானவர்களுக்கு எங்கு இடம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது?

ஈ. அற்பாயுசு, தீர்க்காயுசு எவற்றிற்கு கிடைக்கிறது?

உ. இவ்வுரை நடைப்பகுதியில் ஆசிரியர் கூற விழைவது யாது?

பகுதி - III

04,05,06,07 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு மாத்திரம் விடை தருக.

04. தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்
தமிழிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலை சேர்
துறை துறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

1. இப்பாடலில் கவிஞர் காண விழையும் நூலகம் எப்படிப்பட்டது?

2. சுவடிச்சாலை என்பதன் பொருள் யாது?

3. "அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்"..... என்ற பாடலடியினை விளக்குக.

4. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.

□ சர்வகலாசாலை

□ அமுதம்

□ தொண்டு

5. நூலகத்திற்கு வருவோர்க்கு எத்தகைய தொண்டு செய்ய வேண்டுமென கவிஞர் குறிப்பிடுகிறார்?

05. பத்தி எழுத்தில் மரம் என்பது உயர்திணை என்பதற்கு பத்தியாளர் கூறும் காரணங்களை எழுதுக.

06. வாய்மொழிப் பாடல் என்ற பகுதியில் மருத்துவிச்சியின் வாழ்த்து என்ற பகுதி உறவுகளை மட்டுமன்றி சுற்றத்தையும் நோக்கி பரந்துபட்ட வாழ்த்தாகும் தெளிவுபடுத்துக.

07. 1. "இனிது என" என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு செவிலித்தாய் தனது வளர்ப்பு மகனின் இல்லறப் பாங்கினை அவளைப் பெற்ற நற்றாய்க்கு எவ்விதம் எடுத்துக் காட்டுகிறார்?

2. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளை விளக்குக.